# நடப்பு நிகழ்வுகள்- ஆகஸ்ட் 26 - 2017

❖ தமிழ்நாட்டில் தொழிற்சங்கங்களைத் தோற்றுவித்துத் தொழிலாளர்களின் உரிமைக்கும் முன்னேற்றத்திற்கும் பாடுபட்ட திரு.வி.க அவர்களின் 135-வது பிறந்தநாள் ஆகஸ்ட் 26, 2017-ல் கொண்டாடப்படுகிறது.

❖ அன்னை தெரசா பிறந்த நாள் - 1910 ஆகஸ்ட் 26. இவர் அல்பேனியா நாட்டை பூர்வீகமாக கொண்டவர் இந்திய குடியுரிரம பெற்ற கத்தோலின அருட்சகோதரி ஆவார். இவரின் இயற்பெயர் ஆக்னஸ் கோன்ஜா போஜாஜியூ.

❖ முத்தாலக் தொடர்பான வழக்கில் 5 நீதிபதிகள் அமர்வு தீர்ப்பு அளித்துள்ளது. முத்தாலக் முறைக்கு 6 மாதங்கள் இடைக்கால தடை விதித்து 5 நீதிபதிகளும் ஒருமனதாக உத்திரவிட்டனர். மத்திய அரசு 6 மாதத்தில் அவசர சட்ட திருத்தம் கொண்டு வந்து முத்தாலக் பிரச்சனைக்கு தீர்வு காணலாம். 6 மாதத்திற்குள் சட்டம் இயற்றப்படவில்லையெனில் முத்தாலக் மீதான தடை நீடிக்கும் என்று நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

❖ 23-வது டெல்லி புத்தக கண்காட்சி டெல்லியில் பிரகதி மைதானத்தில் தொடங்கியுள்ளது. இப்புத்தக கண்காட்சி இந்தியாவின் வர்த்தக ஊக்குவிப்பு நிறுவனம் மற்றும் இந்திய வெளியீட்டாளர்களின் கூட்டமைப்பு சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டுக்கான கருதுகோள் “படிக்கும் பாரதம் பெரிய பாரதம்” (Padhe Bharath, Batha Bharath)

❖ சீனா நாட்டின் தென் பகுதியை **“ஹாடோ புயல்”**(HADO STORM) 175 கி.மீ வேகத்தில் தாக்கியுள்ளது. பெரிய அளவில் சேதங்கள் ஏற்பட்டுள்ளது. ஹாங்காக்கில் **புயல் எச்சரிக்கை சிக்னல் ‘10’** என்ற அதிகபட்ச அளவுக்கு வெளியிடப்பட்டுள்ளது.

❖ 29-வது உலக பல்கலைக்கழக விளையாட்டு தைவான் நாட்டில் தைபியில் ஆகஸ்ட் 24-ல் நடைபெற்றது. இதில் நாசிக்கைச் சேர்ந்த மாரத்தான் வீராங்கனை சஞ்சிவினி ஜாதவ் மகளிர் 10,000 மீட்டர் பந்தயத்தில் வெள்ளி வென்றுள்ளார்.

OXFORD IAS ACADEMY

- கேரள மாநில அரசு, மாநிலத்திலுள்ள பள்ளிகளில் புதிதாக “மின் கழிவுகள் அகற்றும்” திட்டத்தை தொடங்கியுள்ளது. மாநிலத்திவுள்ள தகவல் தொழில்நுட்ப ஆய்வகங்கள், அலுவலகங்கள், கடைகள் மற்றும் பள்ளிகளில் தேங்கியுள்ள மின்னணுக்கழிவுகளை மறுசுழற்சி செய்வதாகும். இத்திட்டம் Kerala Infrastructure and Technology for Education (KITE), மற்றும் Clean Kerala ஆகிய நிறுவனத்தின் கூட்டு முயற்சியாகும்.

- அகத்தியர் பிறந்த மார்கழி மாதம் ஆயில்யம் நட்சத்திரம் வரும் நாளை “சித்தா தினமாக” அறிவித்து மத்திய அரசின் ஆயுஷ் அமைச்சகம் அனுமதி வழங்கியுள்ளது.

- Scientific Excellence -2016 பிஜூ பட்நாயக் விருது சண்டிகரில் உள்ள முதுகலை மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் நுரையீரல் மருத்துவ துறையில் பேராசிரியராக உள்ள “திகம்பர் பெஹாரா”-வுக்கு ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக் வழங்கினார்.

- இந்தியாவின் தொலைத்தொடர்பு ஒழுங்கு முறை ஆணையமும் (Telecom Regulatory Authority of India (TRAI)) மலேசிய அரசின் தகவல் தொடர் கமிஷனும் தொலைத்தொடர்பு தொழில்நுட்பங்களில் இணைந்து பணியாற்ற ஒப்பந்தம் செய்துள்ளன.

- இந்தியாவின் முதல் “விதேஷி பவன்” (Videsh Bhavan) சோதனைத் திட்டமாக மும்பையில் துவங்கப்பட்டுள்ளது. விதேஷி பவன் எனப்படுவது வெளியுறவுத் துறை சார்ந்த அனைத்து அலுவலங்களையும் ஒரே இடத்தில் செய்பட வைப்பதற்கான மத்திய வெளியுறவுத்துறையின் திட்டமாகும்.

- “Bharat QR” முறையில் வாடிக்கையாளர்கள் மின்கட்டணத்தைச் செலுத்தும் வசதியை நாட்டிலேயே முதல்முறையாக ஆந்திரபிரதேச மின்வாரியம் அறிமுகப்படுத்தியுள்ளது. Bharat QR என்பது மத்திய ரிசர்வ் வங்கியினால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள QR (Quick Responding Code) மூலம் பணபரிமாற்றம் செய்யும் முறையாகும்.

OXFORD IAS ACADEMY